16-08-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : இந்திய அரசியலில் தெலுங்கானா**

தெலுங்கானாப் பிரச்சனையை பிரித்தானிய கொலனித்துவ ஆட்சியின் பின்விளைவுகளின் அடிப்படையில் நோக்க வேண்டும். பிரித்தானியர் இந்தியாவுக்கு வந்தபோது இந்தியாவில் ஏராளமான சமஸ்தானங்கள் இருந்தன. அவற்றில் கொடுமையான நிலப்பிரபுத்துவ ஆட்சி ஐதராபாத் சமஸ்தானம் விளங்கியது. இந்திய சுதந்திரத்தின் பின்னர் ஐதராபாத்தில் தான் நிலப்பிரபுத்துவ ஆட்சிக்கெதிரான போராட்டம் வெடித்தது. இதை அவதானித்த ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சி மக்களுக்கு ஆதரவு வழங்குவது பிற பிரதேசங்களிலும் இவ்வகையான நிலப்பிரபுத்துவ ஆட்சிக்கெதிரான போராட்டங்கள் தொடங்கும் என்பதை அறிந்து ஐதராபாத் சமஸ்தானத்திற்கு எதிரான போராட்டத்தை ஒடுக்க முடிவெடுத்தது. ஐதராபாத் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக இருந்ததே தெலுங்கானா ஆகும்.

காந்தியவாதியான பொட்டி சிறீராமுலு, தெலுங்கு பேசும் மக்களுக்கான தனி மாநிலம் கோரி உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்ததன் விளைவாக, அன்று சென்னை ராஜதானியில் இருந்த ஆந்திரப் பிரதேசம், மொழிவழி மாநிலமாக 1953-இல் பிரிக்கப்பட்டது.

பின்னர், மொழிவாரி மாநிலம் என்ற அடிப்படையில் தெலுங்கு மொழி பேசும் மக்களைக் கொண்ட தெலுங்கானாவையும் உள்ளடக்கிய ஆந்திரப் பிரதேசமாக 1956-இல் ஒருங்கிணைக்கப்பட்டது. தெலுங்கானா பிராந்தியத்தைக் கொண்ட நிஜாம் சமஸ்தானத்தின் தலைநகராக இருந்த ஐதராபாத், ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரானது.

தெலுங்கானா போராட்டம் இந்தியாவின் பிற பகுதிகளில் இவ்வகையான மக்கள் போராட்டங்கள் நடத்தப்படாததால் மிக மோசமாக ஒடுக்கப்பட்ட போராட்டமாகும்;. இப்போராட்டத்தைத் தொடர்ந்திருக்க வேண்டும்/இல்லை என்ற விவாதங்கள் இன்றும் இந்திய இடதுசாரிகளிடையே உண்டு. இன்றும்

தெலுங்கானா பகுதிகளில் இடதுசாரிகளுக்கு ஆதரவு இருப்பதற்கு தெலுங்கானா போராட்டமே முக்கியமான காரணமாகும்.

இந்தியா தேசங்களின் சமஷ்டி என்ற அடிப்படையில் இருந்தாலும் ஐதராபாத் நிசாமின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் வளர்ச்சியடைந்த பகுதியாக மாறியது. ஆனாலும் இந்தியாவின் வளர்ச்சிகுன்றிய பகுதிகளில் ஒன்றாக தெலுங்க தெலுங்கானா மக்கள் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக உணர்கின்றார்கள். இதனால் மக்கள் தாங்கள் ஆந்திராவின் ஒரு பகுதியாக உணரவில்லை.

ஒரே மாநிலத்தின் இரண்டு பகுதிகள் சமூகப் பொருளாதார அடிப்படையில் தொடர்பற்று ஏற்றத்தாழ்வுடன் இருப்பது தெலுங்கானா பிரிவினையைத் தவிர்க்கவியலாதவாறு அவசியமானதாக்கியுள்ளது. அவர்கள் தங்கள் அலுவல்களைத் தாங்களே கவனித்துக் கொள்வதற்காக தனிமாநிலக் கோரிக்கையை முன்வைக்கிறார்கள்.

ஒரே மாநிலத்தின் இரண்டு பகுதிகள் சமூகப் பொருளாதார அடிப்படையில் தொடர்பற்று ஏற்றத்தாழ்வுடன் இருப்பது தெலுங்கானா பிரிவினையைத் தவிர்க்கவியலாதவாறு அவசியமானதாக்கியுள்ளது. அவர்கள் தங்கள் அலுவல்களைத் தாங்களே கவனித்துக் கொள்வதற்காக தனிமாநிலக் கோரிக்கையை முன்வைக்கிறார்கள்.

தேர்தலில் வெற்றிபெறுவதற்காக காங்கிரஸ் கட்சி தெலுங்கானா பிரிவினையை ஆதரிப்பதாகவும் தனி தெலுங்கானா உருவாக்கித் தருவதாகவும் சொன்னார்கள். கவனிக்க வேண்டிய விடயம் தென்னிந்திய மாநிலங்களில் வேறெந்த மாநிலத்தை விடவும் ஆந்திராவிலேயே காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவுத் தளம் அதிகம்.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**கூலி உழைப்பும் மூலதனமும்**

22-08-2013




அன்னை இட்ட தீ

*[ஆசிரியரின் பெயர்: குழந்தை. ம. சண்முகலிங்கம் | விலை: ரூ. 45.00 (இந்தியா) | வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை -சவுத் ஏசியன் புக்ஸ் ல் பக்கங்கள் : 183 ல் வெளியீட்டாண்டு : 1997]*

ஈழத்து நாடக உலகில் நன்கறியப்பட்டவரான குழந்தை ம.சண்முகலிங்கத்தின் அன்னை இட்டதீ நாடகத்தினதும் அது தொடர்பான நடிகர்களின் அனுபவப் பகிர்வுகளினதும், கட்டுரைகளினதும் தொகுப்பு இது. "ஈழத்துத் தமிழ்நாடக வரலாற்றில் ந.சண்முகலிங்கம்- அரங்கியல் வரலாற்று விமர்சனப் பதிகை" என்னும் கா.சிவத்தம்பியின் சிறப்புக் கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

## இந்திய அரசியலில் தெலுங்கானா

முன்பக்கத் தொடர்ச்சி..

இந்த அரசியல் பின்புலமும் தெலுங்கானா பிரிவினையை நோக்கும் போது கவனிக்க வேண்டும்.

இதற்கு மேலும் தெலுங்கானா தனிமாநிலக் கோரிக்கையைத் தட்டிக் கழித்தால், தெலுங்கானா பிராந்தியத்தில் காங்கிரசு செல்லாக்காசாகிவிடும் என்பதாலும், இதேபோல நாட்டின் இதர பகுதிகளிலும் தனி மாநிலம் கோரி போராட்டங்கள் பெருகத் தொடங்கிவிடும் என்ற அச்சத்தாலும், போராட்டத்தைச் சாந்தப்படுத்தி நீர்த்துப் போக வைக்கும் உத்தியுடனும் காங்கிரசு ஆட்சியாளர்கள் தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கையை கொள்கையளவில் ஏற்பதாக அறிவித்தனர்.

தெலுங்கானா மாநிலம் உருவானால், அது இன்றைய ஆந்திரப் பிரதேசத்துக்கு இழப்பாக இருக்கும், தலைநகரான ஐதராபாத் தெலுங்கானாவுக்குப் போய்விடும் என்றெல்லாம் வாதங்களை வைத்து,

தெலுங்கானா கோரிக்கையை ஆந்திராவின் பிற பகுதிகளில் உள்ள பெருமுதலாளிகளும், புதுப் பணக்காரகளும் எதிர்க்கின்றனர். தெலுங்கானா பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்துவதும் இவர்கள்தான். ஐதராபாத் மற்றும் தெலுங்கானா பிராந்தியத்திலுள்ள பெரு நகரங்களில் சினிமாத் துறை, வீட்டுமனைத் துறை, தகவல் தொழில்நுட்பத் துறை முதலானவற்றில் கோடிகோடியாய் முதலீடு செய்து சூறையாடுவதும் இந்தக் கும்பல்கள்தான். இவர்கள்தான் இப்போது தெலுங்கானா எதிர்ப்புப் போராட்டத்தை பின்னணியிலிருந்து இயக்குகிறார்கள்.

### கூலி உழைப்பும் மூலதனமும்
### (இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)

* முதலாளியம் என்பதென்ன?

* மூலதனம் என்பதென்ன?

* கூலி (ஊதியம்) என்பதென்ன?

* ஒரு பண்டத்தின் விலை எவ்வாறு முடிவாகிறது?

* கூலி எவ்வாறு முடிவாகிறது?


* இலாபம் என்பதென்ன?

* கூலியும் இலாபமும் ஏறி இறங்குதல்

* மூலதனத்தின் இயல்பும் விருத்தியும்

* கூலி உழைப்புக்கும் மூலதனத்துக்குமான உறவு

* முதலாளியப் போட்டியின் விளைவுகள்




கொழும்புக்கு வெளிமாவட்டங்களில் இருந்து வேலைக்கு வரும் சில பெண்களைப் பார்த்து வியந்திருக்கிறேன். புகையிரதப் பயணம் தான். சிலசமயம் புகையிரதம் புறப்படும் நேரம் காலை 5.30 - 6.30 ஆக இருக்கும்.அப்படியாயின் காலை 4 மணிக்கோ அதற்கு முன்பதாகவோ எழுந்திருந்து சமையல் வேலையைக் கவனித்தால் தான் குறித்த நேரத்துக்குப் புகையிரதத்தைப் பிடிக்கமுடியும். காலை உணவும் மதிய உணவும் சமைத்து கொண்டேவருவார்கள். கணவருக்கும் கொடுத்து விடுவார்கள்.

வேலை முடிந்து மாலையில் 6 மணிக்கு புகையிரதத்தை பிடித்து வியர்த்து நாறிய மந்தைக் கூட்டத்துள் ஒருத்தியாக 'நின்று' பயணித்து தனது நகரத்தை அடைய 8 மணி. பின்பு புகையிரத நிலையத்திலிருந்து கடைசிப் பேருந்தைப் பிடித்து நகரத்திலிருந்து தொலைவிலிருக்கும் கிராமத்துக்கு ஒரு மணி நேர பயணம்.ப் 9 - 9.30 ஆகும் இரவு வீடு போய்ச்சேர!

இதற்குள் சின்ன வயது பிள்ளைகள் இருந்தால் டபுள் வேலை! இரவு கணவன் தொலைக்காட்சிக்குள் தன்னை தொலைத்துவிட அடுத்த நாளுக்கான காய்கறிகளை வெட்டி வைப்பதோடு பிள்ளைகளையும் கவனித்துக் கணவனுக்கும் பணிவிடை செய்து படுக்கச்செல்லும் போது நேரம் இரவு 12 ஐத் தொட்டிருக்கும்.. 'அப்பாடா..' என்று கண்ணயரத்தான் அடடா நாளை எழும்புவதற்கு அலாரம் வைக்கவில்லையே' என்கின்ற ஞாபகம் எமனாக வந்து தொலையும்.'விடிய எந்திரிச்சு சமைச்சு வேலைக்கு கிளம்பணுமே'என்ற வெறுப்பில் எப்படித்தான் இவர்களுக்கு தூக்கம் வருகிறது என்பதை நினைத்துப்பார்க்கக்கூட வலிக்கிறது..!

இரும்பு பெண்கள்;பாவம்,பெண்ணியம் பேசுவதற்கு கூட நேரம் கிடைப்பதில்லை..!

-மைந்தன் சிவா (Facebook இல் எழுதிப் பகிர்ந்தது)

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA